உங்கள் அபிமான
தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில்
பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 19.08.2026 • மலர் 04 • இதழ்: 231 • புதன் • Edition : Nagercoil • 19.08.2026 • Vol : 04 • Issue : 231 • Page : 4 • Rs. 5/-

# தமிழகத்தில் மனை, அடுக்குமாடி குடியிருப்புகளின் முதல் விற்பனைக்கு இணையவழி வருகையில்லா ஆவணப்பதிவு

## பதிவுத்துறையில் புதிய நடைமுறை




சென்னை: தமிழகத்தில் மனை, அடுக்குமாடி குடியிருப்பு வீடுகளுக்கான முதல் விற்பனை பதிவுக்கு இணையவழியில் வருகையில்லா ஆவணப்பதிவு கட்டாயமாக்கல் நடைமுறையை முதல்வர் விஜய் நேற்று தொடங்கி வைத்தார்.

பதிவு நடைமுறையில் வெளிப்படைத் தன்மை மற்றும் செயல்திறனை மேலும் மேம்படுத்தவும், பொதுமக்களுக்கு எளிதான சேவையை வழங்கவும் நேரில் வருகையற்ற பதிவு முறை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள், சார்பதிவாளர் அலுவலகம் வராமலேயே மனை அல்லது அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள வீட்டின் முதல் விற்பனையை தற்போது பதிவு செய்யலாம். இப்புதிய முறையில் பதிவுத்துறை இணையதளத்தில் தங்களது உள்நுழைவினைத் தாங்களே உருவாக்கி ஆவணங்களை இணையவழியில் சமர்ப்பிக்கலாம்.

அதன்பின் ஆவணத்தை எழுதிக் கொடுப்பவர்கள், எழுதிப் பெறுபவர்கள் மற்றும் சாட்சிகளின் ஆதார் அட்டை பதிவேற்றப்பட வேண்டும். ஆதார் ஆணையத்தின் மூலம் கைரேகை அல்லது கருவிழிப் படலம் வழி ஆதார் சரிபார்க்கப்பட வேண்டும்.

இதற்கு, இணைய இணைப்பு, ஆதார் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்1 விரல் ரேகை இயந்திரம் மற்றும் கருவிழிப் படலம் ஸ்கேன் செய்யும் கருவி, புகைப்படம் எடுக்க, எடுப்பவரின் பின் புறத்தில் வைக்க தேவைப்படும் நீலத்திரை, புகைப்படக் கருவி ஆகிய தொழில்நுட்ப உபகரணங்கள் தேவைப்படும்.

வருகையில்லா ஆவணப் பதிவின் மூலம் இணைய வழியில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை சார்பதிவாளர்கள் 24 மணி நேரத்துக்குள் பதிவு செய்தோ அல்லது திருத்தத்துக்காக திருப்பி அனுப்பியோ அல்லது நிராகரித்தோ நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வருகையில்லா ஆவணப் பதிவின் மூலம் இணைய வழியில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சார்பதிவாளர்களால் தற்போதுள்ள நடைமுறையில் உள்ளபடி சரிபார்க்கப்பட்டு, சட்ட விதிகளுக்குட்பட்டு பதிவு செய்யப்படும்.

திருத்தத்துக்காகத் திருப்பி அனுப்பப்படும் ஆவணங்களை திருப்பி அனுப்பப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் தேவையான திருத்தங்களுடன் மீண்டும் சமர்ப்பிக்கலாம்.

பதிவு செய்யப்பட்ட ஆவணங்களில் சார்பதிவாளர் டிஜிட்டல் கையொப்பமிட்டு, ஆவணப்பதிவுக்காக உருவாக்கப்பட்ட பயனர் உள்நுழைவில் அவை கிடைக்கச் செய்யப்படும்.

பயனர் உள் நுழைவில் கிடைக்கும் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை 60 நாள்களுக்குள் தேவையான எண்ணிக்கையில் பதிவிறக்கம் செய்யும் வகையில் மென்பொருள் வசதி செய்யப்பட்டுள்ளது. 60 நாள் முடிந்த பின், பொதுமக்கள் நடைமுறையில் உள்ள முறையின் படி சான்றிட்ட நகலுக்கு விண்ணப்பித்து பதிவு செய்யப்பட்ட ஆவணத்தைப் பெறலாம்.

மக்கள் நலனுக்காகவும், பதிவு நடைமுறையை எளிமைப்படுத்தி, வெளிப்படைத் தன்மையோடு செயல்படுத்திடும் வகையிலும் மனை மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்பு வீட்டுக்கான முதல் விற்பனை ஆவணத்தை பதிவுத்துறையில் வருகையில்லா ஆவணப்பதிவு முறையின் கீழ் பதிவு செய்வது கட்டாயமாக்கப்படுகிறது.

இந்த புதிய வசதியை முதல்வர் விஜய் நேற்று தலைமைச்செயலகத்தில் தொடங்கி வைத்தார். நிகழ்வில், அமைச்சர் த. லோகேஷ் தமிழ்செல்வன், துறை செயலர் ஜெ. குமரகுருபரன், பதிவுத் துறைத் தலைவர் .ஜி. கே.அருண் சுந்தர் தயாளன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், வடபழஞ்சி ஊராட்சி உட்பட்ட வெள்ளை பாரப்பத்தி கிராமத்தில் VBG RAM G திட்டத்தின் கீழ் ரூ.9.70 இலட்சம் மதிப்பீட்டில் 45 மீட்டர் நீளம் மற்றும் 35 மீட்டர்அகலம் கொண்ட பரப்பளவில் ஊரணி அமைக்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# "கர்நாடக மாநில நிர்வாகத்தில் தமிழகம் தலையிடக்கூடாது" டி.கே.சிவகுமார்




பெங்களூரு: "எந்த மாநிலமும் மற்ற மாநிலத்தின் நிர்வாக விஷயத்தில்தலையிடக்கூடாது," என்று கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமார் வலியுறுத்தியுள்ளார்.

பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய டி.கே.சிவகுமாரிடம், கர்நாடக வனத்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு குறித்து தமிழக தலைவர்கள் வெளியிட்ட கருத்துகள் பற்றி கேள்வி எழுப்பப் பட்டது.

அதற்குப் பதில் அளித்த முதல்வர் டி.கே. சிவகுமார், "ஒரு மாநிலத்தின் நிர்வாகத்தில் மற்றொரு மாநிலம் தலையிடக் கூடாது. ஓ. பன்னீர்செல்வம் அல்லது வேறு யாராக இருந்தாலும் இந்த அடிப்படைப் புரிதலைக் கொண்டிருக்க வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள சட்டம்ஒழுங்கு விவகாரங்களில் என்னால் தலையிட முடியாது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதற்கே உரிய பிரச்சினைகள் உள்ளன. நமது மாநிலத்தை எப்படிக் காப்பது என்பது நமக்குத் தெரியும் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் தங்கள் பணியைச் செய்யட்டும், நாம் நமது பணியைச் செய்வோம். அவர்களின் நிர்வாகத்தில் தலையிட நான் விரும்பவில்லை. நமது மாநிலத்தின் கண்ணியத்தைக்காக்க வேண்டியது அவசியம். அவர்கள் தங்கள் பணியைச் செய்ய வேண்டும்; நாம் நமது பணியைச் செய்ய வேண்டும்." என்று தெரிவித்தார்.

கர்நாடக மாநிலம் சாம்ராஜநகர் மாவட்டம் ஹனூர் அருகே யுள்ள காவிரி வன விலங்கு சரணாலய பகுதியில் கடந்த 15ம் தேதி அதிகாலையில் மானை வேட்டையாடியதாக அந்தோணிசாமி (50), ஜான் ரோஸ்பீட்டர்(42), லாசர் குமார் (33) ஆகிய மூவரும் அம்மாநில வனத்துறையினரால் சுட்டுக் கொல்லப் பட்டனர். இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதை தொடர்ந்து, வனத்துறை அலுவலகங்கள் சூறையாடப்பட்டன.

கர்நாடக வனப்பகுதியில் சுட்டுக் கொல்லப் பட்ட 3 தமிழர்களின் உடல்களும் இறுதி திருப்பலிக்கு பின்னர், அவர்களின் சொந்த கிராமங்களில் நேற்று அடக்கம் செய்யப்பட்டன.

இந்த சம்பவம் குறித்து தமிழக அரசியல் தலைவர்கள் பலரும் கடும் கண்டனம் தெரிவித்திருந்தனர். இந்த விவகாரம் தொடர்பாக தமிழக அரசு, கர்நாடக அரசிடம் விளக்கம் கேட்க வேண்டும் என்றும், இந்த விவகாரம் குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர். இந்நிலையில், இதற்கு பதில் அளிக்கும் விதமாக கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோட்டாறு புனித சவேரியார் தேவலாயத்தில் சீரமைப்பு பணிகள்;மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு



நாகர்கோவில், ஆக.19

குமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் பிரசித்திப்பெற்ற கோட்டாறு புனித சவேரியார் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலய சீரமைப்பு பணிகள் அரசு நிதி உதவியுடன் நடைபெற்று வருகிறது. இதை நேற்று மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் தெரிவிக்கையில் :

தமிழ்நாடு அரசு சிறுபான்மை மக்களின் கோரிக்கையினை ஏற்று கன்னியாகுமரிமாவட்டம்கோட்டார் புனித சவேரியார் தேவாலயம் புனரமைத்தல் மற்றும் பழுதுபார்த்தல் பணிக்காக ரூ.2.28 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தேவாலயத்தில் தியான மண்டபம், சிலுவை பாதை ஸ்தலங்கள் அமைத்தல், கொடிமரம், தேர், குருசடி சீரமைத்தல், மேற்கூரை பழுதுபார்த்தல், ஆலயம் வர்ணம் பூசுதல், ஆலய பீடப்பணிகள், மின்சார பணிகள் உள்ளிட்ட பல்வேறு நடைபெற்றுள்ளது. மீதமுள்ள சிறு சிறு பணிகளை விரைந்து முடித்திட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து ஊட்டுவாழ்மடம் தொடக்கவேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின்கீழ் செயல்படும் ஊட்டுவாழ்மடம்கம்பளம் நியாயவிலைக்கடை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தங்கு தடையின்றி ரேசன் பொருட்கள் விநியோகிக்கப்படுகிறதா என பொதுமக்களிடம் கேட்டறியப்பட்டது. அனைத்து குடும்ப அட்டைத்தாரருக்கும் அனைத்து குடிமைப் பொருட்களும் கிடைப்பதை கடை ஊழியர்கள் உறுதி செய்ய வேண்டுமென துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

நடைபெற்ற ஆய்வில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் இரா. ஐஸ்வர்யா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் செந்தூர் ராஜன், கோட்டார் சவேரியார் தேவலாய அருட்பணியாளர் அபிஷன், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் ஆறுமுகம், பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலக கண்காணிப்பாளர் மருதுபாண்டியன், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# கன்னியாகுமரி பகுதியில் நான்கு கடைகளில் தொடர் கொள்ளை;போலீஸ் விசாரணை



கன்னியாகுமரி, ஆக.19

கன்னியாகுமரி அடுத்த மகாதானபுரம் ரவுண்டானாவில் அருகே உள்ள காரியகாரமடம் சந்தை பகுதியில் சாலமன் என்பவருக்கு சொந்தமான பழக்கடை, பட்டு ராஜன் என்பவருக்கு சொந்தமான மெடிக்கல், பசுபதி தங்கம் என்பவருக்கு சொந்தமான பேன்சிஸ்டோர், ராஜ்மோகன் என்பவருக்கு சொந்தமான காய்கறி கடை என நான்கு கடைகளில் நேற்று முன்தினம் நள்ளிரவு பூட்டை உடைத்து உள்ளே சென்ற கொள்ளையர்கள் மேஜை டிராயரில் இருந்த மொத்தம் 22 ஆயிரத்து 500 ரூபாய் மற்றும் பேன்சி கடையினுள் இருந்த இரண்டு ஜோடி வெள்ளி மெட்டியும் கொள்ளையடிக்கப்பட்டது.

நேற்று காலையில் கடையை திறக்க வந்த கடை உரிமையாளர்கள் திருட்டு போய் இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.இது குறித்து தகவலறிந்த கன்னியாகுமரி போலீசார் மற்றும் கைரேகை நிபுணர்கள் சோதனை நடத்தினர். இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். பொதுமக்கள் நடமாட்டம் மிகுந்த மகாதானபுரம் ரவுண்டானாவில் நடந்த கொள்ளை சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. மேலும் இதற்கு முன்னர் கொட்டாரம் ராமர் கோவில் உண்டியல் பூட்டை உடைத்து பணம் கொள்ளையடிக்கப்பட்டு, அங்கிருந்த சிசிடிவி ஹார்ட் டிஸ்க் அருகில் உள்ள கிணற்றில் வீசி சென்ற கொள்ளையர்கள் அதே பாணியில் சாமிநாதபுரத்தில் உள்ள கடை மற்றும் பூட்டியிருந்த வீட்டிற்குள்நுழைந்து பொருட்கள் எதுவும் கிடைக்காத நிலையில் கடையில் இருந்த சிசிடிவி ஹார்ட் டிஸ்க் எடுத்துக் சென்றது போன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. இது பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மு.பிரதாப், இ.ஆ.ப., அவர்கள் குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

# நாகர்கோவிலில் வங்கி ஊழியரை துரத்தி இரும்பு கம்பியால் தாக்குதல்; ஆட்டோ டிரைவர் உட்பட 3 பேர் மீது வழக்கு

நாகர்கோவில், ஆக.19

நாகர்கோவில் கோட்டாறு கலைநகர் பகுதியை சேர்ந்தவர் சுந்தரேஸ்வரன் (29) தனியார் வங்கியில் வேலை பார்த்து வருகிறார். இவரது அத்தான் அனிஷ் ஆட்டோ டிரைவராக உள்ளார். சவாரி எடுப்பதில்அனிஷ்கும்ஆட்டோ டிரைவரான குருசடி அம்புரோஸ் என்பவருக்கும் முன்விரோதம் இருந்துள்ளது. இந்தப் பிரச்சனையில் அனீஸ் மீது அம்புரோஸ் ஆசாரிப்பள்ளம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

இது குறித்து அறிந்ததும் அம்புரோசை சந்தித்து அத்தான் அனிஷ் மீது ஏன் புகார் அளித்தீர்கள் என சுந்தரேஸ்வரன் கேட்டுள்ளார். இதில் அம்புரோசுக்கும் சுந்தரேஸ்வரனுக்கும் இடையேமுன்விரோதம் ஏற்பட்டது. இந்த முன்விரோதத்தில் கடந்த 16ஆம் தேதி சுந்தரேஸ்வரன் ஆயுதப்படை சந்திப்பில் பைக்கில் சென்று கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த அம்புரோஸ் மற்றும்செல்லமணி, ரெஜின் ஆகியோர் ஆட்டோவில் வந்து சுந்தரேஸ்வரன் பைக்கில் இடித்துள்ளனர். இதில் கீழே விழுந்த சுந்தரேஸ்வரனை தாக்க முயன்றனர். உயிருக்கு பயந்து அவர் தப்பி ஓடும்போது, கீழே விழுந்து நான்கு பற்கள் உடைந்தன. முகத்திலும் காயங்கள் ஏற்பட்டது.

இதையடுத்து அனிஷை சுற்றி வளைத்து இரும்பு கம்பியால் அம்புறோஸ் உள்ளிட்டவர்கள் தாக்கி கொலை மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது. சத்தம் கேட்டு பொதுமக்கள் குவிந்ததால் அங்கிருந்து தப்பினர்.

இதையடுத்து சுந்தரேசன் குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். புகாரின்பேரில் அம்புறோஸ் உட்பட 3 பேர் மீது கோட்டாறு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.


# 1820 கிலோ ரேசன் அரிசி,ஆம்னி கார் பறிமுதல்

திருப்பூர்,ஆக19

குடிமை பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை ஐ.ஜி ரூபேஸ்குமார் மீனா உத்தரவு படி, எஸ்.பி (பொறுப்பு) ஶ்ரீனிவாச பெருமாள், டி.எஸ்.பி (பொறுப்பு) ரமேஷ்குமார் ஆகியோர் மேற்பார்வையில் ரேசன் அரிசி கடத்தலை தடுக்க போலீசார் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், திருப்பூர், கனியாம்பூண்டி ராக்கியாபாளையம் ரோட்டில் ரேசன் அரிசி கடத்தி வருவதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. அந்த தகவல் அடிப்படையில் இன்ஸ்பெக்டர் ராஜசேகர், எஸ்.ஐ அன்சாரி மற்றும் போலீசார் ராக்கியாபாளையம் தில்லை நகரில் வாகன தணிக்கையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக வந்த ஆம்னி காரை நிறுத்தி சோதனை செய்தனர்.

அதில் அரசால் இலவசமாக வழங்கப்படும் 1820 கிலோ ரேசன் அரிசி இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. போலீசார் தொடர்ந்து செய்த விசாரணையில் அவர் திருப்பூர், வெள்ளியங்காடு, பட்டுக்கோட்டையார் நகரை சேர்ந்த சபி (35) என்பதும், அவர் கனியாம்பூண்டி, வஞ்சிபாளையம், ராக்கியாபாளையம் ஆகிய பகுதியில் பொதுமக்களிடம் குறைந்த விலைக்கு ரேசன் அரிசிகளை வடமாநிலத்தவர்களுக்கு கள்ளச்சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்ய கடத்தி சென்றது தெரியவந்தது. தொடர்ந்து போலீசார் வழக்குப் பதிவு செய்து சபியை கைது செய்தனர். மேலும், 1820 கிலோ அரிசி, ஆம்னி கார் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்..

# குண்டர் சட்டத்தின் கீழ் வாலியர் கைது




சிவகங்கைஆக 18,

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட பகுதியான ஷேக் மாதர் வீதியில் முகமது ஆசிப் என்பவர் துணிக்கடை நடத்தி வருகிறார்,இவரது கடையில் உள்ளாடை தர வேண்டும் என கேட்டு தான் மறைத்து வைத்திருந்த வாளை எடுத்து, அங்கிருந்த நபரை தலை மற்றும் நெற்றியில் வெட்டிய குற்றத்தி ற்காக பதிவு செய்யப்பட்ட கொலை முயற்சி வழக்கில் தொடர்புடைய குற்றவாளியான மன்சூர் அலிகான் குண்டர் சட்டத்தில் கைது செய்ய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. அபிஷேக் குப்தா மாவட்ட ஆட்சியருக்குபரிந்துரை செய்திருந்தார், மாவட்ட கண்காணிப்பாளர் பரிந்துரையை ஏற்று மாவட்ட ஆட்சியர் திரு. ஆகாஷ் , குண்டாஸ் வழக்கு பதிய உத்தரவு பிறப்பித்து இருந்தார் , இதன் அடிப்படையில் சாயல்குடியைச் சேர்ந்த மன்சூர் அலிகான் (32) குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார், என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து வெளியிடப்பட்ட செய்தி குறிப்பு தெரிவிக்கிறது.

# ஈரோடு வேளாளர் என்ஜினியரிங் தொழில்நுட்ப கல்லூரியில் மாநில அளவிலான ட்ரோன் போட்டி

ஈரோடு ஆக 19

ஈரோடு திண்டலில் உள்ளவேளாளர் என்ஜினியரிங் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு பொறியியல் துறை சார்பில் யுகாந்திரா 26 என்ற பெயரில் மாநில அளவிலான டிரோன் போட்டி 2 நாட்கள் நடந்தது. வேளாளர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் சந்திரசேகர் தலைமையில் நடந்த இந்த நிகழ்ச்சியில் அறக்கட்டளை உறுப்பினர் யுவராஜா முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் ஜெயராமன் வரவேற்றார். சென்னை கருடா ஏரோஸ் பேஸ் நிறுவன பேராசிரியர் பொற்கொடி இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு போட்டியை தொடங்கி



வைத்தார். இதில் பல்வேறு தடுப்புகள் அமைக்கப்பட்ட பாதையில் விபத்துவிடாமல்டிரோன் இயக்கும் அப்ஸ்டாக்கின் போட்டி குறிப்பிட்ட எடை உடைய பொருட்களைடிரோன்தூக்கி செல்லுதல், ப்ரீஸ்டைல் ஆகிய மூன்று பிரிவுகளில் போட்டி நடத்தப்பட்டது. ஈரோடு திருப்பூர் நாமக்கல் கோவை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த என்ஜினியரிங் கல்லூரி மாணவர்கள் தாங்கள் தயாரித்த டிரோன்களை கொண்டு வந்து பங்கேற்றனர். இதில் துறை தலைவர் நிஷா ஏஞ்சலின் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# களியக்காவிளை அருகே கார் மோதி தொழிலாளி உயிரிழப்பு ;கல்லூரி விரிவுரையாளர் மீது வழக்கு

களியக்காவிளை, ஆக.19

களியக்காவிளை அருகேயுள்ள வயலங்கரை, இடைக்கவிளை வீட்டைச் சேர்ந்தவர் விமல் ரோஸ் (30). கட்டுமானத் தொழிலாளி. இவர் ஞாயிற்றுக்கிழமை கோழிவிளை பகுதியிலிருந்து திட்டங்கனாவிளை பகுதிக்கு தனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். தையாலுமூடு பகுதியில் வந்த போது, கேரள மாநிலம் காட்டாக்கடை பகுதியில் உள்ள கிறிஸ்தவ கல்லூரியில் விரிவுரையாளராக பணியாற்றி வரும் சூரியகோடு, குறிச்சிவிளையைச் சேர்ந்த செல்லப்பன் மகன் சஜிகுமார் (47) ஓட்டி வந்த கார், விமல் ரோஸின் இருசக்கர வாகனம் மீது மோதியது. இதில் தூக்கி வீசப்பட்டு பலத்த காயமடைந்த விமல் ரோஸை அப்பகுதியினர் மீட்டு குழித்துறை அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சைக்குப் பின்னர் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தார்.

இதுகுறித்து களியக்காவிளை போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

# மார்த்தாண்டத்தில் கள்ளக்காதலை கண்டித்த மின்வாரிய ஊழியருக்கு அடி உதை; எலக்ட்ரீசியன் கைது

மார்த்தாண்டம், ஆக. 19

மார்த்தாண்டம் அருகே உள்ள சிருவாருவிளைப்பகுதியை சேர்ந்தவர் எட்வின் பிரைட் (48). தமிழக அரசின் மின்வாரியத்தில் உதவியாளராக வேலை செய்து வருகிறார். இவரது தம்பி ஷாஜகான் என்பவர் மனைவிக்கும் விளாத்திவிளை பகுதி சேர்ந்த எலக்ட்ரீசியன் அகஸ்டின் (40) என்பவருக்கும் இடையே தகாத உறவு இருந்து வந்துள்ளது. இதனால் எட்வின் பிரைட்டிற்கும் அகஸ்டினுக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்துள்ளது.

இந்த நிலையில் எட்வின் பிரைட் வீட்டிற்கு சம்பவத்தன்று அகஸ்டின் சென்றுள்ளார். பின்னர் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டு, தாக்கி கொலை மிரட்டல் விடுத்து விட்டு அங்கிருந்து தப்பி ஓடி விட்டார்.

இந்த தாக்குதலில் படுகாயம் அடைந்து எட்வின் பிரைட் குழித்துறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். இது குறித்து மார்த்தாண்டம் போலீசார் அகஸ்டின் மீது வழக்கு பதிவு செய்து அவரை கைது செய்தனர்.

# முதல் அமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள்; ஈரோடு ஆட்சியர் ஆலோசனை



ஈரோடு ஆக 19

ஈரோடு ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 2026ம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் நடத்துவது தொடர்பாக முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. இந்த போட்டிகள் ஈரோடு மாவட்ட அளவில் வரும் செப்டம்பர் 4ம் தேதி தொடங்கப்படவுள்ளன. இப்போட்டிகளில் பங்கேற்க ஆர்வமுள்ளவர்கள் 31.08.2026 வரை இணையதளத்தில் உரிய ஆவணங்களுடன் வீரர்கள் பதிவு செய்து கொள்ளலாம். மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில், கடந்த ஆண்டு நடத்தப்பட்ட 38 வகையான விளையாட்டுப் போட்டிகளுடன், இந்த ஆண்டு முதல் வில்வித்தை, ஷூ துப்பாக்கி சுடுதல், யோகா, மல்லர்கம்பம், ஸ்பீடு ஸ்கேட்டிங், கயாக்யிங் கேனோயிங் உள்ளிட்ட புதிய விளையாட்டுகள் சேர்க்கப்பட்டு, மொத்தம் 45 வகையான விளையாட்டுப் போட்டிகள் செப்டம்பர் முதல் அக்டோபர் மாதம் வரை நடத்தப்படவுள்ளன. இப்போட்டிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் 19 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியர்கள் இளங்கலை முதலாம் ஆண்டு முதல் முதுகலை இரண்டாம் ஆண்டு வரை மற்றும் பாலிடெக்னிக் பயிலும் மாணவ, மாணவியர்கள் (15 முதல் 35 வயது வரையிலான பொதுப்பிரிவினர். அனைத்து வயது மாற்றுத்திறனாளிகள் மற்றும் அரசு ஊழியர்கள் ஆகியோருக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட உள்ளன. மாவட்ட மற்றும் மண்டல அளவிலான தனிநபர் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.3,000 இரண்டாம் பரிசாக ரூ.2,000 மூன்றாம் பரிசாக ரூ.1,000 வழங்கப்படும். மாநில அளவிலான தனிநபர் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.1,00,000 இரண்டாம் பரிசாக ரூ.75,000 மூன்றாம் பரிசாக ரூ.50,000 வழங்கப்படும். குழு போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா ரூ.75,000 இரண்டாம் பரிசாக தலா ரூ.50,000 மூன்றாம்பரிசாகதலாரூ.25,000 வழங்கப்பட உள்ளது. எனவே, விளையாட்டில் ஆர்வமுள்ள மாணவியர்கள், பொதுமக்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் அரசு ஊழியர்கள் அனைவரும் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்த வேண்டும். முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் நமது மாவட்டத்தில் சிறப்பாக நடைபெற அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொண்டார். இக்கூட்டத்தில் மாவட்ட விளையாட்டு அலுவலர் திவ்யாநாகேஸ்வரி. செய்தி மக்கள்தொடர்பு அலுவலர் மகேஸ்வரன், அலுவலக மேலாளர் திரு.விஜயகுமார் மற்றும்துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 'டிக்ளாசிஃபைட்: ஆபரேஷன் சிந்தூர்' மூலம் இந்தியாவின் உயர்மட்ட ராணுவ, தேசிய பாதுகாப்புத் தலைவர்கள் முதன்முறையாக ஒன்றிணைப்பு




மதுரை, 19 ஆகஸ்ட் 2026: சுதந்திர தினத்தையொட்டி, 'டிக்ளாசிஃபைட்: ஆபரேஷன் சிந்தூர்' என்ற இரு பாக ஆவணத் தொடரை டிஸ்கவரி தொலைக்காட்சி ஒளிபரப்பியது. இந்தியாவின் மூத்த ராணுவ மற்றும் தேசிய பாதுகாப்புத் தலைவர்கள், செயல்பாட்டுக் கட்டளை அதிகாரிகள் மற்றும் களப் பணியாளர்களின் நேரடி அனுபவங்கள் மூலம் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையின் முக்கிய அம்சங்களை இந்தத் தொடர் வெளிப்படுத்துகிறது. ஆகஸ்ட் 15 அன்று டிஸ்கவரி தொலைக்காட்சியில் ஒளிபரப்பான இந்த ஆவணத் தொடர் தற்போது discovery+ தளத்திலும் ஸ்ட்ரீமிங் செய்யப்படுகிறது.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர்அஜித்தோவல், நடவடிக்கையின் நோக்கம் மற்றும் இந்தியாவின் பாதுகாப்பு அணுகுமுறை குறித்து தனது முதல் பேட்டியில் விளக்குகிறார். பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர், உளவுத் தகவல் சேகரிப்பு, கண்காணிப்பு, இலக்குகளை அடையாளம் காணுதல், ஒத்திகைகள் மற்றும் துல்லியமான தாக்குதலுக்கான திட்டமிடல் ஆகியவை முதல் பாகத்தில் இடம்பெறுகின்றன. இரண்டாவது பாகம் திட்டமிடலில் இருந்து செயல்பாட்டுக்கான மாற்றத்தை மையமாகக் கொண்டுள்ளது. தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படை இடையேயான ஒருங்கிணைப்பு, தாக்குதலுக்கு முந்தைய பதற்றமான தருணங்கள், நிகழ்நேர முடிவுகள் மற்றும் நடவடிக்கையின் நிறைவு ஆகியவை இதில் விரிவாக இடம்பெறுகின்றன. பங்கேற்ற அதிகாரிகளின் நேரடி அனுபவங்கள் மூலம், நடவடிக்கையின் பின்னணியையும் செயல்படுத்தப்பட்ட விதத்தையும் பார்வையாளர்களுக்கு நெருக்கமாகக் கொண்டு வருகிறது.




# சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் எச்ஐவி/எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு பேரணி

சேலம் ஆக 19

சேலம் மாவட்டத்தில் எய்ட்ஸ் விழிப்புணர்வு பிரச்சாரம் தீவிரமாக மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலுவலகத்தின் மூலம் இளைஞர்கள், பொதுமக்கள் மத்தியில் எச்ஐவி/ எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் விதமாக 12.08.2026 முதல் 12.10.2026 வரை இரண்டு மாதங்களுக்கு மாவட்டம் முழுவதும் எய்ட்ஸ் விழிப்புணர்வு குறித்த பல்வேறு நிகழ்ச்சிகள் வட்டார, கிராம மற்றும் நகர அளவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் கடந்த 15.08.2026 அன்று சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் பிரிவில் பணிபுரியும் பணியாளர்கள் கலந்து கொண்டு பொதுமக்களிடையே எய்ட்ஸ் குறித்து உறுதிமொழி எடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இன்றையதினம்தொடங்கி வைக்கப்பட்டுள்ள விழிப்புணர்வு நிகழ்வின் வாயிலாக சேலம் மாவட்டத்தில் உள்ள அரசு, அரசு நிதி உதவி பெறும் தனியார் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு எய்ட்ஸ் குறித்த பயிற்சி வழங்குதல், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் வாயிலாக அனுப்பப்பட்ட நடமாடும் மொபைல் வாகனங்கள் மூலமாக முகாம் அமைத்து எச்ஐவி, சிபிலிஸ், ஹெச்பிஎஸ் பரிசோதனைகள் மேற்கொள்ளுதல் ஓமலூர், சங்ககிரி, மேட்டூர், ஆத்தூர் ஆகிய வட்டார அளவில் ஆட்டோக்கள் மூலம் பேரணி மற்றும் கல்லூரி மாணவர்கள் பங்கேற்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் மூலமும் தொடர்ந்து விழிப்புணர்வு நடத்தப்பட உள்ளது. சேலம் மாவட்டத்தில் எச்ஐவி/எய்ட்ஸ் தாக்கம் அதிகமாக உள்ள கிராமம் மற்றும் நகர பகுதிகளில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக போக் மீடியா கலை நிகழ்ச்சிகள் 16 நாட்களுக்கு நடத்தப்பட உள்ளது. மேலும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலகத்தின் மூலமாக அங்கன்வாடி பணியாளர்களுக்கு மற்றும் வட்டார அளவில் கிராம பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கு எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வுகளும் மேற்கொள்ளப்பட உள்ளது. அதன் ஒரு பகுதியாக இன்றைய தினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு பேரணி தொடங்கி வைக்கப்பட்டது. இந்த பேரணியில் 500க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக மாவட்ட ஆட்சியர் தலைமையில் எச்ஐவி/ எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு உறுதிமொழியை மாணவ மாணவியர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.




மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., தலைமையில், மாநகர காவல் ஆணையாளர் எஸ். ராஜேந்திரன், இ.கா.ப., முன்னிலையில் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் குடமுழுக்கு தொடர்பான முன்னேற்பாடு கூட்டம் நடைபெற்றது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ந. தேவநாதன் ,மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார்,இ.ஆ.ப.,மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் க.அன்பழகன், மாநகர காவல் துணை ஆணையர் (வடக்கு) இ. கார்த்திக், இ.கா.ப., மாநகர மாநகர காவல் துணை ஆணையர் (போக்குவரத்து) எஸ்.வனிதா , உதவி ஆட்சியர் (பயிற்சி) சித்தார்த் போகர்னா, இ.ஆ.ப., மாநகராட்சி துணை ஆணையாளர் ஜெய்னுலாப்தீன், திட்ட இயக்குநர்(ஊரக வளர்ச்சி முகமை) சதீஷ் பாபு உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடன் உள்ளனர்.

# கோவை"இயற்கை சுவாசம்" அமைப்பிற்கு சிறந்த சமூக சேவை விருது வழங்கி கௌரவிப்பு




கோவை ஆக:19

கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் அருகே சாமி செட்டிபாளையம் பகுதியில் உள்ள தனியார்கல்லூரியில் சமூகத்தில் சிறப்பாக இயங்கி வரும் சமூக சேவை அமைப்பான "மேக்ஸ்வெல் அறக்கட்டளை" அமைப்பின் 5ம் ஆண்டு துவக்க விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் சமூகத்திற்கு சமூக சேவை செய்யும் மற்ற அமைப்புகளை ஊக்குவிக்கும் விதமாக தற்போது சிறப்பாக செயல்பட்டு வரும் "இயற்கை சுவாசம்" என்ற பெயரில் மிகச் சிறப்பாக சமூக சேவை புரிந்து வரும் ]

அதன் இயக்குனர் மா. பிரேம்குமார் அவர்களுக்கு சிறந்த சேவைக்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்த விருதை மேக்ஸ்வெல் அறக்கட்டளை நிறுவனர் முருகன் மற்றும் விழாவில் கலந்து கொண்ட சிறப்பு அழைப்பாளர்கள் வழங்கி வாழ்த்து தெரிவித்தார்கள். இந்நிகழ்ச்சியில் பல்வேறு சின்னத்திரை பிரபலங்கள் மற்றும் அறக்கட்டளை நிறுவனங்கள் கலந்து கொண்டு கலை நிகழ்ச்சிகளுடன் தொடங்கி பின்,உடல் ஊனமுற்றோர் பள்ளி குழந்தைகள்,ஏழை எளியோர்கள் என பல்வேறு பயனாளிகளுக்கு நலத்திட்டங்கள் வழங்கப்பட்ட து. உடன் "இயற்கை சுவாசம்" சமூக சேவை நிர்வாகிகள் அலெக்ஸ் மற்றும் சங்கர் கலந்து கொண்டார்கள்.



சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்ற 80வது சுதந்திர விழாவில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் மகளிர் நலன் மற்றும் சமூக சேவையில் சிறப்பாகப் பணியாற்றிய சிறந்த தொண்டு நிறுவனத்திற்கான விருது மற்றும் ரூ.1.00 இலட்சத்திற்கான காசோலையினை ஈரோடு அட்சயம் அறக்கட்டளைக்கு தமிழ்நாடு முதலமைச்சரால் 15.08.2026 அன்று வழங்கப்பட்டதைத் தொடர்ந்து தாம் பெற்ற விருது மற்றும் தொகைக்கான காசோலையினை ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அட்சயம் அறக்கட்டளை நிறுவனர் / தலைவர் பெ.நவீன்குமார் மற்றும் குழுவினர்கள் மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமியிடம் நேற்று காண்பித்து வாழ்த்துப்பெற்றார்கள்.

# மாவட்ட ஆணழகன் போட்டியில் 'மிஸ்டர் தென்காசி' பட்டம் வென்ற ஶ்ரீதர்க்கு மாவட்ட ஆட்சியர் பாராட்டு சான்றிதழை வழங்கினார்




தென்காசி, ஆகஸ்ட்.19

தென்காசி மாவட்ட அமெச்சூர் பாடி பில்டிங் அசோசியேஷன் சார்பில் சுதந்திர தின விழா மற்றும் பாரத் உடற்பயிற்சி கழகத்தின் 47வது ஆண்டு விழா என இருபெரும் விழா சௌந்தர்யா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. விழாவில் கழகத்தின் செயலாளரும் 'ஆசிய இரும்பு மனிதர்' என அழைக்கப்படுபவருமான குற்றாலிங்கம், தலைவர் பூங்குன்றன் வேலாயுதம், மாவட்ட விளையாட்டு அலுவலர் ராஜேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு ஆணழகன் போட்டியை தொடங்கி வைத்தனர். மாவட்ட அளவில் நடைபெற்ற இப்போட்டியில் 50, 55, 60, 65, 70, 75 பிளஸ் உள்ளிட்ட எடைப் பிரிவுகள் மற்றும் பாடி பில்டிங், மாஸ்டர், மென் பிசிக்ஸ் உள்ளிட்ட 9 பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன. இதில் தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட வீரர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர். மாவட்ட ஆணழகன் போட்டிக்கான நடுவர்களாக தேசிய நடுவர் ஜே.பி.ஆர். போஸ், மற்றும் நடுவர்கள் சண்முகசுந்தரம், முருகன், முத்துப்பாண்டி, கணேசன், ராம்சன், முருகப்பெருமாள், அசார் உள்ளிட்டோர் செயல்பட்டு போட்டியாளர்களை தேர்வு செய்தனர். இதில் ஆர்.பி. பிட்னஸ் ஜிம்மைச் சேர்ந்த ஶ்ரீதர், மாவட்ட ஆணழகனாகவும் 'மிஸ்டர் தென்காசி' பட்டத்தையும் வென்றார். அவருக்கு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங் ஆணழகன் திருவுருவச் சிலை, பாராட்டு சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசை வழங்கி பாராட்டினார். தொடர்ந்து பல்வேறு எடைப் பிரிவுகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கும் பரிசுகள், சான்றிதழ்கள் மற்றும் ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் ராஜகோபாலன், முத்தையா, சௌந்தர்யா டவர் உரிமையாளர் சுப்பிரமணியன், தேசிய விளையாட்டு வீரக்குமார், மனக்காவலன், கார்த்திக், ராமன், முருகன், பரணி லாட்ஜ் மாரியப்பன் என்ற கருணாநிதி உள்ளிட்ட சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# பாலக்கோடு பேரூராட்சியில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டிடம் வேண்டி மனு



தருமபுரி ஆகஸ்ட் 19

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு பேரூராட்சியில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டிடம் வேண்டி ஆட்சியரிடம் பொதுமக்கள் கோரிக்கை மனுவை அளித்தனர். அந்த மனுவில் அவர்கள் கூறியுள்ளதாவது. பாலக்கோடு பேரூராட்சிக்குட்பட்ட மேல் தெரு பகுதியில் அரசு அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருகிறது, இந்த மையத்தில் 30 க்கும் மேற்பட்ட குழந்தைகள் பயின்று வருகின்றனர். மேலும் அங்கன்வாடி பணியாளர்கள்/ ஆசிரியர்கள் என மொத்தம் நான்கு பேர் பணியாற்றி வருகின்றனர், இந்த நிலையில் அங்கன்வாடி மையம் இயங்கி வந்த பழைய கட்டிடம் சுமார் 6 ஆண்டுகளுக்கு மேலாகி மிகவும் பழுதடைந்து, இடிந்து விழும் ஆபத்தான நிலையில் இருந்து வருகிறது. கட்டிடத்தின் சுவர்கள், மேற்கூரை மற்றும் இதர பகுதிகள் மிகவும் மோசமான நிலையில் இருப்பதால் எந்த நேரத்திலும் விபத்து ஏற்பாடும் அபாயம் உள்ளது. 30 க்கும் மேற்பட்ட பச்சிளம் குழந்தைகள் தினசரி பயன்படுத்த வேண்டி அங்கன்வாடி கட்டிடம் இவ்வாறு பாதுகாப்பாற்ற நிலையில் இருப்பது மிகவும் கவலைக்குரியதாகும். குழந்தைகளின் உயிர் மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் சூழ்நிலை இருப்பதால் இதனை அவசரமான பொது நலப் பிரச்சினையாக கருதி பழைய அங்கன்வாடி கட்டிடத்தை அகற்றி அதே இடத்தில் புதிய கட்டிடத்தை கட்டிதர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆட்சியரிடம் தெரிவித்துள்ளதாக மனுவில் ஊர் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

# காட்பாடியில் மின் திருட்டு

## 18 பேருக்கு அபராதம் விதித்து மின்வாரியம் எச்சரிக்கை




வேலூர் ஆக:19

காட்பாடி

வேலூர் மாநகராட்சி 6வது வார்டுக்குஉட்பட்ட காட்பாடி வைபவ் நகர் பகுதியில் ராஜஸ்தானைச் சேர்ந்த சுமார் 30 குடும்பங்கள் கடந்த 15 ஆண்டுகளாகத் தற்காலிக கூடாரங்கள் அமைத்துத் தங்கி வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு முறையான இட ஆவணங்களோ தற்காலிக கூடாரங்களுக்கு மின் இணைப்போ இல்லை எனக் கூறப்படுகிறது. இதனால் இரவு நேரங்களில் அவ்வழியாகச் செல்லும் மின் கம்பிகளில் சட்ட விரோதமாகக் கொக்கி போட்டு இவர்கள் மின்சாரம் பயன்படுத்தி வந்துள்ளனர். இதன் காரணமாக அப்பகுதியில் அடிக்கடி குறைந்த மின்னழுத்தம் Low Voltage மற்றும் மின் தடை ஏற்படுவதாகப் பொதுமக்கள் மின்சார வாரிய அதிகாரிகளிடம் தொடர் புகார்களைத் தெரிவித்தனர். பொதுமக்களின் புகாரையடுத்து மின்வாரிய ஊழியர்கள் அப்பகுதியில் சிறப்புத் தணிக்கை மேற்கொண்டனர். அப்போது 18 கூடாரங்களில் சட்ட விரோதமாகக் கொக்கி அமைத்து மின் பயன்பாட்டில் ஈடுபட்டது உறுதியானது. இதையடுத்து, சம்பந்தப்பட்ட 18 பேருக்கும் தலா 500 வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. இனிவரும் காலங்களில் இதுபோன்று மின் திருட்டில் ஈடுபட்டால் மின்சாரத் துறை விஜிலென்ஸ் பிரிவு மூலம் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் எச்சரித்தனர். மேலும் இந்தச் சம்பவம் தொடர்பாகப் பிரம்மபுரம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிருஷ்ணகிரியில் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் அமைதி பேரணி

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் மத்திய அரசு கொண்டுவதிலுள்ள தொகுதி மறுசீரமைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து அமைதிப்பேரணி ஈடுபட்டனர்,

தமிழககாங்கிரஸ்தலைவர் மாணிக்கம் தாகூர் மற்றும் கிருஷ்ணகிரி காங்கிரஸ் கோபிநாத் ஆகியோரின் வழிக்காட்டுதலின் படி நடைப்பெற்ற இந்த கண்டன அமைதிப்பேரணி நடைப்பெற்றது கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் இருந்து துவங்கிய இந்த அமைதிப் பேரணியானது லண்டன் பேட்டை, நேதாஜி ரோடு, பழையப்பேட்டை, காந்தி ரோடு உள்ளிட்ட பல்வேறு முக்கிய சாலை வழியாக சென்று பொது மக்களிடைய மத்திய பாஜக அரசு

தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களை பாதிக்கும் வகையிலும் வட மாநிலங்கள் பலனடையும் வகையிலும் தொகுதி மறு வரை மசோதாவை தாக்கல் செய்ய உள்ளஇந்த மோசடி மசோதாவால்தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்கள் பெருமளவில் பாதிக்கும் வகையில் கொண்டுவரப்பட உள்ள தொகுதி மறு வரை மசோதாவை உடனடியாக மத்திய அரசு வாபஸ் பெற வேண்டும் என வலியுறுத்தினார்




சென்னையில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் தாளமுத்துநகரைச் சேர்ந்த சரவணக்குமார் என்பவருக்கு தமிழ்நாடு முதலமைச்சரின் மாநில இளைஞர் விருதுக்கான பாராட்டு பத்திரம் மற்றும் ரூ.1,00,000/க்கான காசோலையினை வழங்கியதைத் தொடர்ந்து, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நேற்று மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன், அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்



தருமபுரி ஆகஸ்ட் 19

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள அதியன் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பொது மக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்ட ஆட்சியர் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கி அதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார். சாலை வசதி, குடிநீர் வசதி, பேருந்து வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் வேண்டியும், பட்டா வேண்டுதல் ,சிட்டா பெயர் மாற்றம், புதிய குடும்ப அட்டை வேண்டுதல், வாரிசு சான்றிதழ் ,வேலை வாய்ப்பு, இலவச வீட்டு மனை பட்டா, முதியோர் ஓய்வூதிய தொகை, உள்ளிட்ட இதர உதவித்தொகைகள் பல்வேறு கோரிக்கைகள் குறித்தும் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித்தொகைகள், உபகரணங்கள் வேண்டி 683 மனுக்கள்பெறப்பட்டன. இந்த கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் மதுமதி, உதவி ஆட்சியர்கள் ஜார்ஜ் ,செம்மலை, சமூக பாதுகாப்பு திட்ட தனித் துணை ஆட்சியர் ஷெர்லி ஏஞ்சலா , மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சரவணன் உள்ளிட்ட தொடர்புடைய அரசு துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# சேலம் மாவட்டம் மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவு சங்கத்தை சேர்ந்த மீனவர்கள் உரிமம் புதுப்பித்து கொள்ளவும்!

## புதிய மீன்பிடி உரிமம் பெறவும் விண்ணப்பிக்கலாம்!!

சேலம் ஆக 19

சேலம் மாவட்டம் மேட்டூர்அணைநீர்தேக்க மீனவர்களுக்காக கே.கே. 98 மீனவர் கூட்டுறவு விற்பனை சங்கமானது 1956 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது வரை 2016 உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இதில் 2000 மீனவர்களுக்கு மீன்பிடி உரிமம் வழங்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 14 ஆம் நாள் முதல் ஏப்ரல் 15 ஆம் நாள் வரை மீன்பிடி உரிமங்கள் புதுப்பித்து வழங்கப்படுகிறது. இந்த மீனவர் கூட்டுறவு விற்பனை சங்கமானது அதன் துணைவிதியின் படி சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டத்தில் உள்ள குள்ளவீரன்பட்டி, மூலக்காடு, மாசிலாபாளையம், நாவிதன் கொட்டாய், கீரைக்காரனூர், கூனாண்டியூர், நாட்டாமங்கலம், மாதையன் கோட்டை, பண்ணவாடி, தானம்பட்டி, ஆண்டிக்கரை, குள்ளனூர், காவேரிபுரம், கோட்டையூர், திப்பம்பட்டி, தெலுங்கனூர், வெள்ளை கரட்டூர், வீரனூர், கோவூர், சேத்துக்குழி, கூத்தனூர், பள்ளிப்பட்டி, கூளையூர், பொறையூர், பாலவாடி, வெடிக்காரனூர், மங்கானூர், மாமரத்துக்காடு, புதுவேலமங்கலம், தாளவாடி, செட்டிப்பட்டி, கோவிந்தபாடி, இருசா கவுண்டனூர் ஆகிய இடங்களை எல்லைகளாக கொண்டது.

இச்சங்கத்தை சேர்ந்த மேற்படி உரிமத்தை புதுப்பிக்காத மீனவர்கள் தங்களது மீன்பிடி உரிமத்தை புதுப்பிக்கவும், புதிய மீன்பிடி உரிமத்திற்காக மேற்கண்ட சங்க விவகார எல்லைக்குட்பட்ட மீனவர்கள் தங்களது இருப்பிட சான்றுடன் 15.09.2026 அன்று மாலை 4.00 மணிக்குள் மீன்வளத்துறை உதவி இயக்குனர் அலுவலகம், மேட்டூர் அணை பார்க் எதிரில், கொளத்தூர் ரோடு, மேட்டூர் அணை. தொலைபேசி எண் 04298 244 045 என்ற அலுவலகத்தில் வி ண்ணப்பிக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேற்கண்ட விவகார எல்லைக்கு உட்படாத இடங்களில் இருந்து வரும் விண்ணப்பங்கள்நிராகரிக்கப்படும். இவ்வாறு மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

# த.வெ.க. அரசின் 100 நாள் சாதனை :

## தொழிலதிபர் பால்ராஜ் ஏற்பாட்டில் இனிப்பு மற்றும் துண்டு பிரசுரங்கள் விநியோகம்




நாகர்கோவில், ஆக. 19

தமிழகத்தில் முதல்அமைச்சர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றி கழக அரசு பொறுப்பேற்று இன்றுடன் (18 ந்தேதி) 100 நாட்கள் நிறைவடைகிறது. இதையொட்டி அரசின் மக்கள் நல திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் விழிப்புணர்வு பிரச்சாரம் குமரி மாவட்டத்தில் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. தொழிலதிபரும், தமிழக வெற்றி கழக நிர்வாகியுமான பால்ராஜ் முன்னெடுப்பில், பல்வேறுபகுதிகளில்த.வெ.க. அரசின் 100 நாள் சாதனைகளை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் களப்பணிகள் நடைபெற்று வருகின்றன. முக்கியமாக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அறிவிக்கப்பட்ட முழுமையான விவசாய கடன்தள்ளுபடி, நடுத்தர மற்றும் எளிய குடும்பங்களின் மாதாந்திர சுமையை குறைக்கும் மின்சார திட்டம், பெண்களின் சமூக பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலான சிறப்பு நலத்திட்டங்கள் என அனைத்து திட்டங்களையும் மக்களிடையே கொண்டு சேர்க்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்தநிலையில் த.வெ.க. அரசின் 100வது நாள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக நாகர்கோவில் வடசேரி பஸ் நிலையத்தில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி, சாதனை விளக்க துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. தொழிலதிபரும், த.வெ.க. நிர்வாகியுமான பால்ராஜ் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், குமரி கிழக்கு மாவட்ட செயலாளர் மாதவன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

பொதுமக்கள், பயணிகள், வணிகர்களுக்கு இனிப்புகளை வழங்கல் மற்றும் துண்டு பிரசுர விநியோகத்தை மாவட்ட செயலாளர் மாதவன் தொடங்கி வைத்தார். தொடர்ந்து பஸ் நிலைய வளாகம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் முதற்கட்டமாக 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அரசின் சாதனைகள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட இணை செயலாளர் பிரேம்குமார், செயற்குழு உறுப்பினர்கள் சக்திகுமரன், நிகேஷ், மாவட்ட தொண்டரணி ரஞ்சித், மாவட்ட கொள்கை பரப்பு செயலாளர் ரூபன், மாவட்ட தொண்டரணி இணை அமைப்பாளர் அசோக் செல்லம், மாநகர நிர்வாகி முத்துப்பாண்டி, வார்டு செயலாளர்கள் ஆனந்த் செல்லம், அஜித், விஜயகுமார், சசிகுமார், ஜெரின், விஷ்ணு உள்பட பலர் கலந்துகொண்டனர்.

# இதயம் நற்பணி இயக்க விழா மதிமுக சார்பில் மலைவாழ் மக்களுக்கு நலத்திட்ட உதவிகள்




ஈரோடு ஆக 19

ஈரோடு இதயம்நற்பணி இயக்கம் 23 ம்ஆண்டுவிழா நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஆகியவை ஈரோடு கொங்கு கலையரங்கில் நடந்தது.இதில் ஈரோடு மாநகர் மாவட்ட மதிமுக செயலாளரும், மறுமலர்ச்சி இரத்ததானகழகஒருங்கிணைப்பாளருமான முருகன் கலந்து கொண்டு மலைவாழ்மக்களுக்கு போர்வைகள், மற்றும் கைலிகளை திட்ட இயக்குநர்ரகுபதியிடம் வழங்கினார். அருகில் இதயம் நற்பணி இயக்க தலைவர்எஸ்.வி. மகாதேவன் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சண்முகன், காஞ்சிகுமார், செங்குந்தர் கல்விக்கழக செயலாளர் சிவானந்தம், மற்றும்திருநாவுக்கரசு, சிவ சண்முகம்உள்படபலர் கலந்து கொண்டனர்.

# திருப்பூரில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணி




கோவை ஆக:19

"We Lead The Leaders–Lead The Change" அமைப்பின் சார்பில் நடைபெற்ற இந்த பேரணியை, இயற்கை விவசாயி மற்றும் சூழலியல் ஆர்வலர் சுட்டையில்லா சாமியப்பன் தொடங்கி வைத்தார். "நெகிழி இல்லா திருப்பூர்,குப்பை இல்லா திருப்பூர்" என்ற கருத்தை வலியுறுத்தி நடைபெற்ற இந்த பேரணியில், நெகிழிப் பயன்பாட்டை தவிர்ப்பது, சுற்றுச்சூழலை பாதுகாப்பது, தூய்மையான நகரை உருவாக்குவது உள்ளிட்டவை குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

பேரணியில் கலந்து கொண்டவர்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தும் பதாகைகளை ஏந்தியவாறு, பல்வேறு விழிப்புணர்வு முழக்கங்களை எழுப்பிய படி சென்றனர்.

மேலும் "மாற்றுவோம், மாற்றுவோம்,ஒன்றிணைவோம், மாற்றுவோம், முன்னேறுவோம்" என்ற முழக்கத்துடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தொடங்கிய இந்த விழிப்புணர்வு பேரணியில்,சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், சமூக அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். திருப்பூரை தூய்மையான, பசுமையான நகரமாக மாற்றுவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என பேரணியின் மூலம் வலியுறுத்தப்பட்டது.

# பல்லடம் அறிவொளி நகரில் 80வது சுதந்திர தின விழா!



பல்லடம்,ஆக19

அறிவொளி நகரில் நாட்டின் 80வது சுதந்திர தின விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவையொட்டி தேசியக் கொடி ஏற்றப்பட்டு, அப்பகுதி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

அறிவொளி நகர் பெரிய பள்ளிவாசல் தலைவர் ஷாஜகான் தலைமையில் நடைபெற்ற விழாவில், பள்ளிவாசல் முத்தவல்லி ஹபிபுர் ரஹ்மான் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். விழாவில் பொருளாளர் முகமது ஜீபைர் வரவேற்புரை வழங்கினார்.கிராஅத்நிகழ்ச்சியை துணை இமாம் அபூபக்கர் சித்திக் நூரைன் நடத்தினார்.

சிறப்புரையை தலைமை இமாம் மௌலானா முஹம்மது அப்பாஸ் சிராஜி வழங்கினார்.

மேலும் செயலாளர் அனீஸ், செயற்குழு உறுப்பினர்கள் அக்கீம், நவ்ஷாத், இப்ராஹிம் ஷா, சப்ருதீன், அம்ஜத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நன்றியுரையை செயற்குழு உறுப்பினர் அபுதாகிர் வழங்கினார். விழாவில் அப்பகுதியைச் சேர்ந்த இஸ்லாமியப் பெருமக்கள், மதரஸா மாணவர்கள் மற்றும் அனைத்து தரப்பு பொது மக்களும் திரளாகக் கலந்து கொண்டு, தேசியக் கொடியை வணங்கி சுதந்திர தினத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.




திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் மண்டலம்3, வார்டு50, பெரிய தோட்டம் மெயின் ரோட்டில் தார் சாலை அமைப்பது குறித்து நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் உதவி ஆணையாளர் (மண்டலம்3) சரவணன், சுகாதார ஆய்வாளர் ராமகிருஷ்ணன், உதவி பொறியாளர்கள் கோபிகிருஷ்ணன், ஸ்டாலின், மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# களியக்காவிளை அருகே கஞ்சா வைத்திருந்ததாக 4 வாலிபர்கள் கைது

களியக்காவிளை, ஆக. 19

குமரி மாவட்டத்தில் கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்கள் பயன்பாட்டை தடுக்கபோலீஸ்சூப்பிரண்டு ஸ்டாலின் உத்தரவின் பேரில் மாவட்ட காவல் துறை சார்பில் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நிலையில் களியக்காவிளை அருகே உள்ள செங்கவிளை நான்கு வழிச்சாலை சந்திப்பில் சிலர் கஞ்சாவுடன் சுற்றி திரிவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் பேரில் களியக்காவிளை போலீசார் நான்கு வழிச்சாலை சந்திப்பதில் சென்று கண்காணித்தனர்.

அப்போது 4 வாலபர்கள் போலீசாரை பார்த்த உடன் தப்பியோட முயன்றனர். சுதாரித்துக் கொண்ட போலீசார் அவர்களை சுற்றி வளைத்து படித்தனர். விசாரணை நடத்தியதில் அவர்கள் அதங்கோடு பகுதியை சேர்ந்த ஜெர்வின் (20), மெதுகும் மல் பகுதியை சேர்ந்த அபின்ராஜ் (19) மற்றும் அருள்ராஜ் (20 ), கூட்டப்புளி பகுதி சேர்ந்த அனிஷ்(20) என்பது தெரிய வந்தது. மேலும் அவர்கள் நான்கு பேரும் கஞ்சா உபயோகித்திருந்தனர்.

இதை அடுத்து அவர்களை போலீசார் சோதனை செய்த போது கஞ்சா புகைப்பதற்கு சாதகமாக பீடி, சிகரெட்டில் கஞ்சாவை அடைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவற்றை போலிசார் பறிமுதல் செய்து 4 பேரை கைது செய்து செய்தனர். கஞ்சாவை எங்கிருந்து வாங்கி வந்தார்கள்? என்றுபோலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# பெண்குழந்தைகளுக்கான சிலம்ப பயிற்சி 50 பேருக்கு சான்றிதழ் வழங்கி பாராட்டிய கலெக்டர்



நாகர்கோவில், ஆக.19

கன்னியாகுமரி மாவட்ட சமூகநலத்துறை சார்பில் நாகர்கோவில் எஸ்.எல்.பி அரசு மேல்நிலைப் பள்ளி கலையரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் கீழ் தற்காப்பு பயிற்சி பெற்ற மாணவியருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப். சான்றிதழ் வழங்கி பாராட்டினார். பின்னர் அவர் தெரிவிக்கையில்:

சமூகநலத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின்கீழ், ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் திங்கள்நகர் மற்றும் பூதப்பாண்டி ஆகிய பகுதிகளில் செயல்படும் சமூக நல விடுதிகளில் பயனடைந்து வரும் 50 பெண் குழந்தைகளுக்கு 45 நாட்களுக்கு மாலை வேளையில் (90 நிமிடங்கள்) பெண் பயிற்றுநரை கொண்டு சிலம்ப பயிற்சி வழங்கப்பட்டது.

சிலம்ப பயிற்சி பெற்ற மாணவிகளின் செயல் விளக்க நிகழ்வு நடைபெற்றது. பயிற்சியில் கலந்து கொண்ட மாணவியர் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

தற்போதைய காலகட்டத்தில் தற்காப்புக் கலைகள் மிகவும் அவசியமான ஒன்றாகும். பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்களின்சுயபாதுகாப்புக்கும், உடலுறுதிக்கும் சிலம்பம் போன்ற பாரம்பரியத் தற்காப்புக் கலைகளைக் கட்டாயம் கற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட சமூகநல அலுவலர் காயத்ரி, மாவட்ட கல்வி அலுவலர் ஜெயராஜ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கல்வி) சாரதா, பள்ளி துணை அலுவலர் பென்னட், எஸ்.எல்.பி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் தெய்வபிரியா, மாவட்ட பெண்கள் அதிகாரமளித்தல் மைய ஒருங்கிணைப்பாளர் எவர்லின் சுபா, மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# இருக்கண்குடி மாரியம்மன் கோவிலில் ரூ.23.67 கோடியில் புதிய வசதிகள்
## பக்தர்கள் பயன்பாட்டுக்கு திறப்பு




விருதுநகர், ஆக. 19:

சாத்தூர் வட்டம், இருக்கண்குடி அருள்மிகு மாரியம்மன் திருக்கோவிலில் ரூ.23.67 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய உட்கட்டமைப்பு வசதிகள் பக்தர்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டன.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. சி. ஜோசப் விஜய் தொடங்கி வைத்த பணிகளைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. என்.ஓ. சுகபுத்ரா, இ.ஆ.ப., கோவில் வளாகத்தில் குத்துவிளக்கேற்றி புதிய கட்டடங்களை பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்.

இதில், ரூ.2.23 கோடியில் நவீன வசதிகளுடன் முடி காணிக்கை மண்டபம், ரூ.1 கோடியில் அன்னதான மண்டபம், ரூ.8.44 கோடியில் விருந்து மண்டபம் மற்றும் ரூ.12 கோடியில் 235 கடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தென் மாவட்டங்களில் பிரசித்தி பெற்ற இருக்கண்குடி மாரியம்மன் கோவிலுக்கு திருவிழா மற்றும் முக்கிய விசேஷ நாட்களில் ஏராளமான பக்தர்கள் வருகை தருகின்றனர். அவர்களின் வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் இந்த புதிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதிய வசதிகள் மூலம் பக்தர்களுக்கு சுகாதாரமான அன்னதானம், முடி காணிக்கை செலுத்தும் வசதி, நிகழ்ச்சிகள் நடத்துவதற்கான இடவசதி மற்றும் தேவையான பொருட்களை வாங்குவதற்கான வாய்ப்புகள் கிடைக்கும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பரம்பரை அறங்காவலர் குழுத்தலைவர் ராமமூர்த்தி, செயல் அலுவலர் இளங்கோ, இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# வாணியகுடியில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்;கலெக்டர் அறிவிப்பு

நாகர்கோவில், ஆக.19

குமரி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் சார்பில் நாகர்கோவிலில் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது வெள்ளிக்கிழமைகளில் சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமானது நடைபெற்றுவருகிறது. இம்மாதத்திற்கான சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமானது 21082026 அன்று வெள்ளிக்கிழமை காலை 09.30 மணிக்கு நடைபெற உள்ளது.

இவ்வேலைவாய்ப்பு முகாமில் கன்னியாகுமரி மாவட்ட தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் நேரடியாக வருகை புரிந்து தங்களுடைய நிறுவனங்களுக்கு தேவையான தகுதியுள்ள நபர்களை தேர்வு செய்ய உள்ளனர். இத்தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் பத்தாம் வகுப்பு, பிளஸ் 2, பட்டப்படிப்பு, டிப்ளமோ, ஐடிஐ மற்றும் கணினி பயிற்சி கல்வித்தகுதியுடையவர்கள் கலந்து கொள்ளலாம்.

இந்த தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள 21 082026 அன்று காலை 10.00 மணிக்கு புனித ஜேம்ஸ் திருமண மண்டபம், வாணியக்குடியில் நேரடியாக வந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், இம்முகாமின் மூலம் தனியார்துறையில் தேர்வு செய்யப்படும் பதிவுதாரர்களது வேலைவாய்ப்பு பதிவு மூப்பு விவரங்கள் ரத்து செய்யப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்க விருப்பமுள்ள வேலைநாடுநர்கள் மற்றும் வேலையளிப்பவர்கள் தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம் (www.tnprivatejobs.tn.gov.in) என்ற இணையதளத்தில் தங்களை பதிவு செய்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். எனவே, இச்சேவையை பொதுமக்களும், நிறுவனங்களும் பயன்படுத்தி கொள்ளுமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர், மு. பிரதாப் தெரிவித்துள்ளார்.

# 25 ஆண்டுகள் பழமையான போர்வெல் பைப் லைன்: 6 மாதங்களாக குடிநீரின்றி தவிக்கும் குமாரபுரம் மக்கள்



விளாத்திகுளம், ஆக. 19:

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் அருகே அயன் செங்கல்படை ஊராட்சிக்குட்பட்ட குமாரபுரம் கிராமத்தில் கடந்த 6 மாதங்களாக முறையான குடிநீர் வழங்கப்படவில்லை எனக் கூறி, கிராம மக்கள் காலிக்குடங்களுடன் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட போர்வெல் மற்றும் குடிநீர் பைப் லைன் அடிக்கடி பழுதடைவதால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுவதாக மக்கள் தெரிவித்தனர். வாரத்திற்கு இருமுறை பைப் லைன் உடைந்து வருவதால், 5 கி.மீ. தொலைவில் உள்ள மார்த்தாண்டம்பட்டி கிராமத்துக்குச் சென்று குடிநீர் எடுத்து வருவதாகவும், சில நேரங்களில் அங்கும் தண்ணீர் கிடைக்காததால் பணம் கொடுத்து குடிநீர் வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

குடிநீர்பிரச்னைதொடர்பாக கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு அதிகாரிகளிடம் மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனக் கூறி, காலை 9.30 மணி முதல் அலுவலகத்தில் காத்திருந்தனர். அதிகாரிகள் மனுவை வாங்க முன்வராததால் ஆத்திரமடைந்த மக்கள் அலுவலர் அறை முன்பு அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் வந்த திட்ட மேலாளர் மற்றும் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தினர். புதிய குடிநீர் திட்ட அறிக்கை மேலிடத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதுவரை மாற்று ஏற்பாடு செய்யப்படும் எனவும் உறுதியளித்ததைத் தொடர்ந்து மக்கள் கலைந்து சென்றனர். முறையானகுடிநீர்வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# கோவை சரவணம்பட்டியில் மாநகரில் புதிய நவீன கண் மருத்துவமனையைத் துவக்கியது டாக்டர் அகர்வால்ஸ் குழுமம்




கோயம்புத்தூர், ஆகஸ்ட் 18:

இந்தியாவின் மிகப்பெரிய, நம்பகமான கண் மருத்துவமனை குழுமங்களில் ஒன்றான டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனை, கோயம்புத்தூர், சரவணம்பட்டியில் தனது புதிய அதிநவீன கண் மருத்துவமனையைத் திறந்துள்ளது. அதிநவீன கண் மருத்துவச் சேவைகளை அனைவரும் எளிதில் பெறுவதை உறுதி செய்யும் இலக்கோடு செயல்படும் இக்குழுமத்தின் பயணத்தில், மேற்கு தமிழ்நாடு பிராந்தியத்தில் தொடங்கப்பட்டிருக்கும் இம்மருத்துவமனை, ஒரு முக்கிய மைல்கல் நிகழ்வாகும். இது, டாக்டர். அகர்வால்ஸ் குழுமம் தமிழ்நாட்டில் தொடங்கியிருக்கும் 89வது மருத்துவமனையாகும். கண் புரை, கண்அழுத்த நோய், விழித்திரை, கருவிழி, ஒளிவிலகல் மற்றும் விழியில் ஒட்டறுவை சிகிச்சை ஆகிய பல்வேறு பிரிவுகளில் உயர் சிகிச்சை வழங்கும் அனுபவம் வாய்ந்த நிபுணர்கள் இங்கு பணியாற்றுகின்றனர்.

திறப்பு விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, கண்களில் ஏற்படும் பாதிப்புகளை முன்கூட்டியே கண்டறிந்து சரியான நேரத்தில் சிகிச்சை பெறுவதை ஊக்குவிக்கும் வகையில், 2026 செப்டம்பர் 30 வரை இலவச கண் பரிசோதனை மற்றும் மருத்துவ ஆலோசனைகளை இம்மருத்துவமனை வழங்குகிறது. கட்டணமின்றி இலவசமாக வழங்கப்படும் முழுமையான கண் பரிசோதனைக்கு முன்பதிவு செய்ய, நோயாளிகள் 9594901452 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளலாம்.

இந்த மருத்துவமனையை, எஸ்என்ஆர் சன்ஸ் சேரிட்டபிள் டிரஸ்ட் ன் நிர்வாக அறங்காவலர் டாக்டர். சுந்தர் இராமகிருஷ்ணன் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் டாக்டர். E. கற்பகவள்ளி, மண்டல தலைவர் மருத்துவ சேவைகள், டாக்டர். அகர்வால்ஸ் குழுமத்தின் செயல்பாட்டுப் பிரிவின் மூத்த துணைத் தலைவர் நந்தகுமார் உள்ளிட்ட மருத்துவமனை நிர்வாகத்தின் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# சுகாதாரத் துறையில் உலகின் முதல் திட்டம் அப்போலோ மருத்துவமனைகள் அறிமுகம்




மதுரை, ஆகஸ்ட் 19:

இந்தியாவிலேயே முதன் முறையாக ஞாயிற்றுக்கிழமைகளிலும் அனைத்து விதமான வழக்கமான மருத்துவச் சேவைகளை வழங்கும் 'எப்போதும் திறந்திருக்கும்; எப்போதும் இங்கே இருப்போம்' என்ற புதிய திட்டத்தை அப்போலோ மருத்துவமனைகள் அறிமுகப்படுத்தியுள்ளது.

முக்கியச் சிறப்பம்சங்கள்:

★ 7 நாட்களும் முழுச் சேவை: அவசர சிகிச்சைகளுடன் சேர்த்து இனி ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெளிநோயாளி ஆலோசனைகள் (OPD), உடல்நல மற்றும் நோயறிதல் பரிசோதனைகள், திட்டமிடப்பட்ட அறுவை சிகிச்சைகள் தடையின்றி வழங்கப்படும்.

★ காரணம்: 'தேசத்தின் ஆரோக்கியம் 2026' அறிக்கையின்படி, பணிச்சுமை காரணமாகப் பலரும் மருத்துவப் பரிசோதனைகளைத் தள்ளிப்போடுவதால், அறிகுறிகளற்ற நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நாள்பட்ட நோய்கள் அதிகரிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

★ பயன்கள்: பணிபுரிபவர்கள் வாரநாட்களில் விடுப்பு எடுக்காமலும், குடும்பத்தினர் முதியோரைச் சிரமமின்றியும் ஞாயிற்றுக்கிழமைகளில் மருத்துவமனைக்கு அழைத்து வர இது பெரிதும் உதவும். தாமதமான சிகிச்சையைத் தடுத்து, முன்னெச்சரிக்கை ஆரோக்கியத்தைப் பேணும் நோக்கில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக அப்போலோ குழுமத்தின் தலைவர் டாக்டர் பிரதாப் சி. ரெட்டி தெரிவித்துள்ளார்.



தஞ்சாவூர் மாவட்டம் சாஸ்த்ரா நிகர்நிலை பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்த இந்திய குடியரசு துணைத் தலைவர் சி. பி. ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு மாவட்ட கலெக்டர் ரேவதி புத்தகம் வழங்கினார். மாவட்ட காவல் கண்காணிப் பாளர் சுந்தரவதனம் உடன் உள்ளார்

# நாட்டில் உயர் கல்வி ஆய்வு சார்ந்ததாக இருக்க வேண்டும்;குடியரசு துணைத் தலைவர் பேச்சு



தஞ்சாவூர் ஆகஸ்ட் 19

நாட்டில் உயர்கல்வி என்பது ஆய்வு சார்ந்ததாக இருக்க வேண்டும் என்றார் குடியரசு துணை தலைவர் சி பி ராதாகிருஷ்ணன்

தஞ்சாவூர் சாஸ்த்ராநிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 40 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்று அவர் மேலும் பேசியதாவது:

அண்மையில் முடிவடைந்த நாடாளுமன்ற கூட்டுத் தொடரில் பொது தேர்வு முறை கேடுகளை தடுத்தல் சட்ட திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டு, சட்டமாக்க ப்பட்டது .இது நாட்டில் பொது தேர்வு முறையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது

சமுதாயத்தின் தீய சக்திகள் தண்டிக்கப்பட்டால் தான், நல்ல மனிதர்களை காப்பாற்ற முடியும். எனவேதான், மத்திய அரசும் அதே வழியில் சட்டத்தை கொண்டு வந்துள்ளது

நம் நாட்டில் உயர் கல்வியில் சேர்க்கை தற்போது 30 சதவீதமாக உள்ளதை 2035 ஆம் ஆண்டுக்குள் 50 சதவீதமாக உயர்த்துவோம் என்பதில் உறுதியாக இருக்கிறோம் உயிர் கல்வி என்பது ஆராய்ச்சி சார்ந்ததாக நகர வேண்டும்

முன்பொருகாலத்தில் மேற்கத் திய நாடுகளில் ஆராய்ச்சி முடிவு களுக்கும் நாம் கண்டுபிடிப்பு களுக்கும் நாம் காத்துக் கொண்டி ருந்தோம் .ஆனால் கரோனா காலத்துக்கு பிறகு நம் நாட்டை உலகம் முழுவதும் உற்று நோக்கு கிறது. பிரதமர் மோடி கொண்டு வந்த மிகப்பெரிய மாற்றமே அதற்கு காரணம் .

விஞ்ஞானிகளை பிரதமர் மோடி ஊக்குவித்ததால், கரோனா தடுப் பூசி கண்டுபிடிக்கப்பட்டது. மேற்கத் திய நாடுகள் கரோனா தடுப்பூசி கண்டுபிடித்தாலும், அதை விற்றுபணமாக்கினர். ஆனால் நமது பிரதமர் மோடி நம் நாட்டில் கண்டு பிடிக்கப்பட்ட கரோனா தடுப்பூசி நமக்கு மட்டுமல்லாமல் ஏழை நாடுகளுக்கும் இலவசமாக ஏற்றுமதி செய்தார். இதன் மூலம் பேரழிவிலிருந்து மனித குலம் காப்பாற்றப்பட்டது

இதே போல நாம் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு உலக அளவில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் விக்சித் பாரத் 2047 (வளர்ச்சியடைந்த பாரதம் )என்பது நிஜமாகும். எனவே ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள், அனைவரும் ஆராய்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும். அதற் கு காலங்கள் கடந்தாலும்,அதை ஒருபோதும் கைவிட்டு விடக் கூடாது என்றார் சிபி. ராதாகிருஷ்ணன் .

தமிழக ஆளுநர் ஆர்.வி. ஆர் லேகர் சிறப்புரையாற்றினர்

மேலும் திறன் மேம்பாட்டு மையம் அமைப்பதற்காக சாஸ்த்ரா டாடா கம்யூனிகேஷன் இடையே ஒப்பந்த ம், சாஸ்த்ரா ஒருங்கிணைந்த ஏ.ஐ மையம் உள்பட 6 திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டன

விழாவில் மாநிலங்களவை தி.மு.க உறுப்பினர் கல்யாண சுந்தரம், சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழக வேந்தர் சேதுராமன், துணை வேந்தர் வைத்திய சுப்பிரமணியம், முதன்மையர் (திட்டம் மட்டும் மேம்பாடு) சுவாமிநாதன், பதிவாளர் சந்திரமௌலி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

# தருமபுரியில் வேலைவாய்ப்பு முகாம் குறித்த விழிப்புணர்வு வாகனத்தை மாவட்ட ஆட்சியர் துவக்கி வைத்தார்



தருமபுரி ஆகஸ்ட் 19

தருமபுரி மாவட்ட வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பயன்பெறும் வகையில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு தொழில் நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக நகர்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் வருகின்ற 22 ம் தேதி தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் நடைபெற உள்ளது. இந்த முகாமில் உற்பத்தி தகவல் தொழில்நுட்பம், ஜவுளி, வங்கி சேவைகள், காப்பீடு, மருத்துவம், கட்டுமானம் உள்ளிட்ட முக்கிய துறைகளில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட முன்னணி வேலை அளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டு 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களுக்கு பணியாளர்களை தேர்வு செய்ய உள்ளனர்.

இந்த முகாம் குறித்து பொதுமக்கள் மற்றும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக விழிப்புணர்வு வாகனங்களை தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சரவணன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். அப்போது அவர் கூறியதாவது. தருமபுரியில் நடைபெறும் மாபெரும் தனியார்துறைவேலைவாய்ப்பு முகாமில் பொதுமக்கள் மற்றும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் கலந்து கொண்டு பயன் பெறலாம் என்றார்.இந்தநிகழ்ச்சியில் மகளிர் திட்ட இயக்குனர் முத்து குமாரசாமி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கவுரிசங்கர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் லோகநாதன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பழனி அருகே பள்ளி மாணவன் தூக்கிட்டு தற்கொலை

பழனி: திண்டுக்கல் மாவட்டம், பழனியை அடுத்த கீரனூர்அருகேமானூர்பகுதியைச்சேர்ந்த முனீஸ்வரன் என்பவரின் மகன் விஷ்வா (15). இவர் அப்பகுதியில் உள்ள பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வந்தார்.

இந்நிலையில், விஷ்வா வீட்டின் உள்ரூமில் சேலையால் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது. இதுகுறித்து தகவல் அறிந்த கீரனூர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் வெங்கடாசலம் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, மாணவன் விஷ்வாவின் உடலை கைப்பற்றினர். பின்னர் உடலை பிரேதப் பரிசோதனைக்காக பழனி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தபோலீசார்,இதுகுறித்துவழக்குப்பதிவு செய்து, மாணவனின் தற்கொலைக்கான காரணம் குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



சேலம் மாவட்டத்தில் போதைப் பொருள் ஒழிப்பு குறித்து மாணவ, மாணவியர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது தொடர்பாக அரசு மற்றும் தனியார் உயர்கல்வி அலுவலர்களுடனான ஒருங்கிணைப்புக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சேலம் மாநகர காவல் ஆணையர் திரு.க.ஜோஷி நிர்மல் குமார், இ.கா.ப., அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்திரு.சு.குத்தாலிங்கம், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்விஜி.பி.நந்தனா, இ.ஆ.ப., காவல் துணை ஆணையர் திரு.மகேந்திரன் இ.கா.ப., (தெற்கு) உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.